மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : பெரம்பலூர் வட்டம் வேப்பந்தட்டையில் நீண்டநெடுங்காலமாக ஏரி ஆகிற அளவிற்கு நல்ல பள்ளமான பகுதி இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இனி மேலாவது இத்திட்டம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : உறுப்பினர் அவர்களின் கேள்விக்குப் பிறகு இத்திட்டத்தைப் பரிசீலிக்கும்படி அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கூட்டுறவு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளின்பேரில் வினா எண். 566 ஒத்திவைக்கப் பட்டிருக்கிறது.

Rural Housing Schemes at Hosur

* 567. *Q.*—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether it is a fact that Rural Housing Schemes have been started in Hosur and Denkanikota taluks of Dharmapuri district ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம் :

(அ) & (இ) கோட்டப் பொறியாளரின் (கிராம வீட்டு வசதிப் பகுதி) கீழ், செயல்படும் கிராம வீட்டு வசதித் திட்டத்தை ஓசூர் வட்டத்தில் பொம்மந்தபள்ளி, சென்னத்தூர், கிருஷ்ணபுரம், உத்தனபள்ளி ஆகிய கிராமங்களிலும் டெங்கனிகோட்டா வட்டத் தில் பேலாளம், சாலிவரத்தைச் சேர்ந்த புதட்டிக்கோட்டை, காக்கா தேசம், போடிச்சிப்பிள்ளி ஆகிய கிராமங்களிலும் நிறைவேற்ற தனிச் சிறப்பு வரைபடங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த கிராம வீட்டு வசதித் திட்டம் மேலே குறிப்பிட்ட கிராமங்களில் நாளடைவில் நிறைவேற்றப்படும்.